DEPOSITION OF WITNESS

CHAPTER CODE OF CIVIL PROCEDURE

IN THE COURT OF THE ADDITIONAL DISTRICT COURT (FTC), THENI.

# OS . No. 117/2020

Deposition of Witness : PW1

| | |
|---|---|
| Name - பிரபாகர் | Father's Name - ஆறுமுகம் |
| Village\City - | Taluk- |
| Caste - | Calling -வழக்கறிஞர் |
| Religion - | Age- |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of 20.09.2023.

**(சாட்சி அழைக்கபட்டு சத்தியபிரமாணம் செய்யபட்டார்)**

**சாட்சி மீண்டும் அழைக்கப்பட்டு குறுக்கு விசாரணை செய்ய அனுமதிக்கப்பட்டார்**

**1 வது பி.வா.கு.வி. தொடரச்சி :**

கேள்வி : 1ம் பிரதிவாதியின் பெயர் உங்கள் பெற்றோர் குடும்ப அட்டையில் உள்ளது என்பது பற்றி உங்களுக்கு தெரியுமா என்றால்?

பதில் : தெரியும்.

கேள்வி : உங்களுடைய தாயாரின் வாரிசு சான்றிதழ் , மற்றும் இறப்பு சான்றிதழ்களை யார் வாங்கினார்கள் என்றால்?

பதில் : நான் தான் வாங்கினேன்.

கேள்வி : அந்த வாரிசு சான்றிதழில் 1ம் பிரதிவாதியின் பெயரை வேண்டும் மென்றே சேர்க்காமல் உள்ளீர்கள் என்றால்?

பதில் : சரியல்ல.

கேள்வி : உங்களுடைய பிராது பாரா 9ல் கூறியுள்ளபடி 1ம் பிரதிவாதியின் திருமணத்தின் போது 20 பவுன் நகையும், மாப்பிள்ளைக்கு 5 பவுன் நகையும், ஒரு வீடு ஒத்திக்கு கொடுத்தார்கள் என்று சொன்னால்?

பதில் : அது பற்றிய விபரம் எனக்கு நேரடியாக தெரியாது.

கேள்வி : அதை காட்டுவதற்கு இந்நீதிமன்றத்தில் ஏதேனும் ஆவணங்கள் தாக்கல் செய்துள்ளீர்களா என்றால்?

பதில் : இல்லை.

கேள்வி : உங்களுடைய பிராது பாரா 10 ல் சொல்லியுள்ளபடி 2019 டிசம்பர் மாதம் 1 ம் பிரதிவாதியின் கணவர் தொழில் தொடங்குவதற்காக 10 பவுன் நகைகளும், 1 லட்சம் ரூபாயும் கொடுத்தார் என்பது பற்றிய விபரம் உங்களுக்கு நேரடியாக தெரியுமா என்றால்?

பதில் : எனக்கு நேரடியாக தெரியும்.

கேள்வி : அப்போது உங்கள் அப்பா , அம்மா தவிர உங்களுடன் யார் யார் இருந்தார்கள் என்றால் ?

பதில் : யாரும் இல்லை .நானும் எனது பெற்றோர்கள் மட்டும் தான் இருந்தோம்.

கேள்வி : அந்த 10 பவுன் நகை கொடுத்தற்கும் , 1 லட்சம் ரூபாய் கொடுத்ததற்கும் எந்த ஆவணமாவது தாக்கல் செய்துள்ளீர்களா என்றால்

பதில் : இல்லை.

கேள்வி : 1 ம் பிரதிவாதியின் கணவர் 03.02.2020 ந் தேதி ரூபாய் 7,20,000 யை தாட்கோ மூலம் கடன் பெற்றார்கள் என்றால் ?

பதில் : அது பற்றி எனக்கு எதுவும் தெரியாது.

கேள்வி : மனு பாரா 12 ல் சொல்லியுள்ள படி 1 ம் வாதியின் மனைவி அதாவது உங்களது தாயார் இறந்த 30 வது நாள் கர்ம கிரிய தினத்தில் 1 ம் வாதி 1 ம் பிரதிவாதியிடம் பத்து சவரன் தங்க நகைகளையும் , ரூபாய் 1 லட்சம் பணத்தையும் மருத்துவமனைக்கு எடுத்து செல்லபட்ட ஆவணங்களையும் 1 ம் வாதி , 1 ம் பிரதிவாதியிடம் கேட்டார்கள் என்றால் ?

பதில் : ஆம் கேட்டார் நானும் உடன் இருந்தேன்.

கேள்வி : அந்த இடத்தில் யார் எல்லாம் உங்கள் உடன் இருந்தார்கள்.?

பதில் : அந்த நேரத்திலும் என்னுடன் யாரும் இல்லை . நானும், என் தந்தையும் இருந்தோம்.

கேள்வி : அந்த மாதிரி ஒரு சம்பவம் நடக்கவில்லை என்றும், சாட்சிக்காக பொய்யாக சாட்சியம் சொல்கீறிர்கள் என்றால்?

பதில் : சரியல்ல.

கேள்வி : நீங்களும் உங்கள் தம்பி யும் உங்களது பெற்றோரை பராமரிக்காத காரணத்தினால் தான் 1 ம் வாதியின் மனைவியின் பெயரில் உள்ள பிராது சொத்தை விற்பனை செய்ய நினைத்து யாரோ ஒருவருக்கு கொடுப்பதற்கு பதிலாக தனது வளர்ப்பு மகளுக்கு கொடுக்கலாம் என்று என்னி 1 ம் பிரதிவாதியின் கணவரிடம் ரூபாய் 3,30,600/–யை மறு பயனாக பெற்று கொண்டு பிராது சொத்தை கிரையம் செய்து கொடுத்தார்கள் எ்னாறல்?

பதில் : சரியல்ல. பொய்யான தகவல்.

கேள்வி : அந்த பிராது சொத்தில் 1 ம் வாதி சாட்சி கையெழுத்து போட்டுள்ளார்கள் என்றால்?

பதில் : என் அம்மாவிடம் இருந்து சொத்தை எழுதி வாங்கிய போது அந்த பத்திரத்தில் எனது தகப்பனார் சாட்சி கையொப்பம் செய்துள்ளார் என்ற விபரம் எனக்கு தெரியாது.

கேள்வி : மேற்படி விபரம் உங்களுக்கு எப்போது தெரியும்?

பதில் : தெரியாது.

கேள்வி : மனு பாரா 17 ல் 1 ம் வாதியின் மனைவி உடல்நல குறைவால் பாதிக்கபட்டு இறந்து விட்டார் என்பதை காட்டக்கூடிய ஆவணங்கள் ஏதும் இந்நீதிமன்றத்தில் எதுவும் தாக்கல் செய்துள்ளீர்களா என்றால்?

பதில் : மருத்துவ ஆவணங்கள் ஏதும் தாக்கல் செய்யவில்லை.

கேள்வி : உங்களுடைய தந்தை என்ன வேலை பார்த்தார் ?

பதில் : ஓட்டுநராக வணிகவரித்துறையில் வேலை பார்த்தார்.

கேள்வி : உங்களுடைய மனு பாரா 16 ல் கூறியுள்ளபடி தேனி சார்பதிவாளர் அலுவலகத்தை காட்டி இது தான் மருத்துவமனை என்று காட்டி கையெழுத்து செய்தார் என்று சொல்லியுள்ளீர்கள் உங்களது தந்தையும் அதில் சாட்சி கையொப்பம் செய்துள்ளார் என்றால், அ ந்த சமயத்தில் அவர் திட மனதில் இருக்கும் நிலையில் அவர் எவ்வாறு சாட்சி கையொப்பம் செய்திருப்பார் என்றால் ?

பதில் : அம்மாவுக்கு உடம்பு சரியில்லாத காரணத்தினால் எனது தந்தையார் மேற்படி நபர்களால் ஏமாற்றபட்டு கையொப்பம் வாங்கினார்.

கேள்வி : 1 ம் பிரதிவாதிக்கு நீங்களோ உங்கள் பெற்றோரோ திருமணத்திற்கு நகையோ, பணமோ கொடுக்கவில்லை என்று சொன்னால் ?

பதில் : சரியல்ல. எங்கள் பெற்றோர்கள் கொடுத்தார்கள்.

கேள்வி : 1 ம் பிரதிவாதி வேறு சாதி மகனை திருமணம் செய்து கொண்டதால் தான் அவர் மீது பொய்யாக பழி சுமத்தி இந்த வழக்கை பொய்யாக தாக்கல் செய்துள்ளீர்கள் என்றால்?

பதில் : சரியல்ல.

கேள்வி : உங்களது தாயார் சரஸ்வதி உங்கள் மீது நம்பிக்கை இ ல்லாத காரணத்தினால் தான் 1 ம் பிரதிவாதியை அழைத்து பிராது சொத்தை அவரது சுய விருப்பத்துடன் நல்ல மன நிலையில் யாருடைய தூண்டுதல் இன்றி 1 ம் பிரதிவாதிக்கு கிரையம் செய்து கொடுத்துள்ளார் என்றால்?

பதில் : சரியல்ல.

கேள்வி : தற்போது பத்திர பதிவு துறையில் எந்த தவறான செயல்கள் செய்ய முடியாது என்பதாலும் , பத்திர பதிவாளர் இரு தரப்பினர்களை பார்த்து அவர்களிடம் விசாரணை செய்த பிறகே பத்திரங்கள் பதிய பதியப்படுவதால் 1 ம் வாதியோ , அவரது மனைவியையோ ஏமாற்றி பிராது சொத்தை கிரையம் பெற்று இருக்க முடியாது என்று சொன்னால் ?

பதில் : தற்போது நடைமுறையில் உள்ள பத்திர பதிவு துறையில் எதிர்மனுதாரர் வழக்கறிஞர் சொல்வது போல் பத்திர பதிவு செய்யபட்டு இருந்தால் எந்த வித தவறுதலும் நடந்து இருக்காது . ஆனால் இந்த பத்திர பதிவானது கடந்த 2020 ல் நடைபெற்றதாகவும் ,ஆகையால் தவறுதல் நடந்து இருக்க வாய்ப்பு உள்ளது.

கேள்வி : 1 ம் பிரதிவாதி கிரைய ஆவணத்தில் சாட்சி கையொப்பம் போட்டதால் தான் இந்நீதிமன்றத்திற்கு சாட்சி சொல்ல வரமாட்டார் என்று சொன்னால்?

பதில் : சரியல்ல. அவரின் முதுமை மற்றும் , நோய் தன்மை காரணமாக இந்நீதிமன்றத்தில் சாட்சியம் அளிக்க முடியா சூழ்நிலை உள்ளது.

கேள்வி : பிராது சொத்தை பொறுத்த அளவில் நேரடியாக எதுவும் தெரியாது என்றாலும், பிராது சொத்தை பொறுத்து நீங்களும் மற்ற வாதிகளோ எந்த உரிமையும் கோர முடியாது என்று சொன்னாலும் ?

பதில் : சரியல்ல. பிராது சொத்தில் உரிமை கொண்டாட எங்களுக்கு முழு உரிமையும் உள்ளது.

கேள்வி : பிராது பாரா 16 ல் சொல்லியுள்ள படி 24.03.2020 ந் தேதி காவல் துறை கண்காணிப்பாளர் அவர்களிடம் புகார் அளித்து அந்த புகாரின் முடிவில் இரு தரப்பினரையும் அழைத்து பேச்ச வார்த்தை நடத்தி 1 ம் பிரதிவாதியின் மீது எந்த தவறும் இல்லை என்றும் இது சொத்து சம்பந்தமான வழக்கு என்பதால் நீதிமன்றத்தில் கோரி பரிகாரம் கோரும் படி காவல் கண்காணிப்பாளர் உங்களை கேட்டு கொண்டாரா என்றால்?

பதில் : காவல் கண்காணிப்பாளர் விசாரணையில் மேற்படி அம்பிகா என்பவர் சொத்தை ஏமாற்றி என் தாயிடம் வாங்கியதை மறைத்து பேசினார் . மேலும் புகார் தொடர்பாக உரிய நீதிமன்றத்தில் பரிகாரம் தேடி கொள்வதாக அம்பிகா கோரினார். அதன் பேரில் காவல் துறையினர் உரிய நீதிமன்றம் மூலம் பரிகாரம் தேடி கொள்ளுமாறு எங்களிடம் கூறினார்கள்.

கேள்வி : அப்போது இது சம்பந்தமாக 1 ம் பிரதிவாதியின் மீது FIR எதுவும் போட்டார்கள் என்றால்?

பதில் : இல்லை.

கேள்வி : மேலும் வழக்கு நிலுவையில் இருக்கும் போது 1 ம் பிரதிவாதியின் இடத்தில் அத்து மீறி உள்ளே நுழைந்து அந்த இடம் தொடர்பாக வழக்கு நிலுவையில் உள்ள என்ற விளம்பர பலகை அங்கு வைத்தீர்களா என்றால்?

பதில் : சரிதான்.

கேள்வி : அது சம்பந்தமாக தேனி அல்லிநகர காவல் நிலையத்தில் உங்களை கூப்பிட்டு விசாரணை செய்தார்களா என்றால்?

பதில் : அல்லிநகர காவல் நிலையத்தில் நான் கொடுத்த புகார் சம்பந்தமாக விசாரணை செய்தார்கள்.

கேள்வி : நீங்கள் வழக்கறிஞராக இருப்பதால் மறு பயன் உடைய கிரைய ஆவணத்தில் தவறுவன் எதுவுமே செய்ய முடியாது என்று தெரிந்தும் நீதிமன்றத்தின் நேரத்தை வீணாக்குவதற்காக பொய்யாக இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளீர்கள் என்றால் ?

பதில் : சரியல்ல.

குறுக்கு விசாரணை தொடர்ச்சி வேண்டுகோளுக்கிணங்க ஒத்தி வைக்கப்படுகிறது.

திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொல்லச் சொல்ல என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு , சாட்சிக்கு படித்துக் காட்டப்பட்டு , அவரால் சரி என ஒப்புக்கொள்ளப்பட்டு என் முன்னால் இன்று 20.09.2023 அன்று புதன்கிழமை சாட்சியால் கையொப்பமிடப்பட்டது.

S GOPINATHAN Digitally signed by S GOPINATHAN Date: 2023.09.20 17:37:27 +0530

கூடுதல் மாவட்ட நீதிபதி. தேனி.
20.09.2023.